**<u>சுருக்கம்</u>**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை – அடையாறு பூங்கா அறக்கட்டளை என்னும் பெயரை சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை என்று பெயர் மாற்றுவது மற்றும் அடையாறு பூங்கா அறக்கட்டளையின் ஒப்பாவண கூறு 2.1 க்கு திருத்தம் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை</u>**

அரசாணை (நிலை) எண்.15, நாள்: 22.01.2010

தை – 09,
திருவள்ளுவர் ஆண்டு – 2041,

<u>படிக்க:</u>

1. அரசு ஆணை (நிலை) எண்.632, வருவாய் துறை, நாள் 22.12.2003
2. அரசு ஆணை (நிலை) எண்.278, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை, நாள் 07.07.2004
3. அரசு ஆணை (நிலை) எண்.153, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை, நாள் 10.11.2005
4. அரசு ஆணை (நிலை) எண்.117, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை, நாள் 11.10.2006
5. அரசு ஆணை (நிலை) எண்.23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை, நாள் 18.02.2008
6. அரசு ஆணை (நிலை) எண்.37, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை, நாள் 10.03.2008
7. அரசு ஆணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை, நாள் 23.09.2008
8. அரசு ஆணை (நிலை) எண்.176, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை, நாள் 24.09.2009

<u>படிக்கவும்:</u>

9. உறுப்பினர் செயலர், அடையாறு பூங்கா அறக்கட்டணை கடித எண்.APT/Name/2009-10/01, நாள் 14.12.2009

* * * * *

**<u>ஆணை:–</u>**

உறுப்பினர்–செயலர் அடையாறு பூங்கா அவர்கள் தம் கடிதத்தில் மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில் அடையாறு ஒடை மற்றும் அடையாறு

கழிமுகத்துவாரத்தை மேம்படுத்தி அடையாறு பூங்கா என்னும் பெயரில் ஓர் உலகத்தரம் வாய்ந்த சுற்றுச் சூழல் பூங்கா அமைப்பதற்காக அடையாறு பூங்கா அறக்கட்டளையை உருவாக்கிட அரசு ஆணை பிறப்பித்தது என்றும், இந்திய அறக்கட்டளைகள் சட்டம் 1982–ன் படி ஓர் ஒப்பாவணம் (Deed) மூலமாக அடையாறு பூங்கா அறக்கட்டளை 10–11–2006 அன்று நிறுவப்பட்டது என்றும், சென்னை அடையாறில், அடையாறு பூங்கா என்ற பெயரில் உயிரின வாழ்க்கைச் சூழல் பூங்கா ஒன்றை உருவாக்குவது, மற்றும் தமிழ்நாட்டின் பல இடங்களிலும் உயிரின வாழ்க்கைச் சூழல் பூங்கா அமைப்பது, பராமரிப்பது, நீர் வழிகள், நீர்நிலைகள் போன்றவற்றை பாதுகாத்தல், கழிவு நீர் மறுசுழச்சி, அரிய வகை பூச்சியினங்கள் மற்றும் தாவர இனங்களை பாதுகாத்தல் போன்றவை இதன் முக்கிய நோக்கங்கள் ஆகும் என்றும் தெரிவித்துள்ளார்.

2. மாசுபடுதலைக் குறைப்பது மற்றும் தடுப்பதற்காக, சென்னையை சுற்றியுள்ள நதிகள், நீர்நிலைகள் மற்றும் நீர்வழிகளின் மறுசீரமைப்பு தொடர்பாக மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அவர்கள் தலைமையில் 11–12–2009 அன்று நடந்த கூட்டத்தில், கீழ்காணும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாக அடையாறு பூங்கா அறக்கட்டளை, உறுப்பினர்–செயலர் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளார்.

1) அடையாறு பூங்கா அறக்கட்டளையானது, அடையாறு பூங்காவைத் தவிர சென்னையின் பல இடங்களில் சுற்றுப்புற சூழல் கெடாமல் நிலையாக இருக்கும் வகையில் நதிகள், நீர்வழிகள் மற்றும் நீர்நிலைகளை பாதுகாக்கவும், நீர் மாசுபடுதலைக் குறைக்கவும், தடுக்கவும், அவற்றை முறையாக உபயோகப்படுத்தவும், தாவர இனங்களை பாதுகாக்கவும், ஒருங்கிணைந்து செயல்படவுள்ளது.

2) இந்த மறுசீரமைப்புத் திட்டத்தினை அடையாறு பூங்காவில் மட்டுமல்லாது சென்னையின் இதர இடங்களிலும் செயல்படுத்தும் வகைக்கு ஏற்றவாறு தற்போதுள்ள அடையாறு பூங்கா அறக்கட்டளை என்னும் பெயரை சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை என்று மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அடையாறு பூங்கா அறக்கட்டளையானது முழுவதுமாக அரசுக்கு சொந்தமாக இருப்பதாலும், அதன் முழு நிதியாதாரமும் தமிழக அரசினைச் சார்ந்திருப்பதாலும், சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை என்று பெயர் மாற்றம் செய்யவும், அதனுடைய ஒப்பாவண கூறு 2.1 –ஐ திருத்தம் செய்யவும் அரசின் அனுமதி பெற வேண்டியது அவசியமாகிறது என்றும் தெரிவித்துள்ள உறுப்பினர்–செயலர், அடையாறு பூங்கா அறக்கட்டளை அவர்கள், அடையாறு பூங்கா அறக்கட்டளை என்ற பெயரை சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை என்று பெயர் மாற்றம் செய்ய வேண்டியும் அதன் ஒப்பாவண கூறு (Trust Deed) 2.1 –ஐ திருத்தம் செய்ய வேண்டியும் அரசைக் கோரியுள்ளார்.

3. உறுப்பினர்–செயலர் அடையாறு பூங்கா அறக்கட்டளை அவர்களின் கோரிக்கையினை அரசு கவனமுடன் பரிசீலித்து அடையாறு பூங்கா அறக்கட்டளை என்ற பெயரை ‘சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை’ என பெயர் மாற்றம் செய்வதற்கும் அதன் ஒப்பாவண கூறு 2.1 – ஐ அதற்கேற்ப திருத்தம் செய்வதற்கும் இதன் மூலம் ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி,
அரசு செயலாளர்.

பெறுநர்:
உறுப்பினர் செயலர், சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை, தியாகராய நகர், சென்னை – 17,
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3.
மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம், சென்னை – 1
மாநில கணக்காயர், சென்னை – 18
இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, சென்னை – 38

நகல்:
மாண்புமிகு முதலமைச்சரின் செயலர் சென்னை – 9
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9
மாண்புமிகு நிதி அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9
மாண்புமிகு சுற்றுசூழல் அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9
முதன்மைச் செயலாளர் / செயலாளர், (நிதி/பொதுப்பணி/கால்நடை மற்றும் மீன் வளம் / நெடுஞ்சாலை மற்றும் துறைமுகங்கள் / சுற்றுசூழல் மற்றும் வனம்) துறை, சென்னை – 9
நிதித்துறை, சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு செயலாளரின் தனி செயலர், சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2/வரவு செலவு) துறை, சென்னை – 9
இருப்பு கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்